**IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT JUDGE,**
**KANNIYAKUMARI AT NAGERCOIL.**

23.03.2026

COS. No. 3/2024

D.W. 3 திரு. ஜெபராஜ்

சாட்சி மீண்டும் இன்று அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு விசாரிக்கப்படுகிறார்.

**குறுக்கு விசாரணை (வாதி தரப்பில்) -**

நான் இந்த வழக்கில் தரப்பினர் அல்ல என்றால் சரிதான். நான் பொறியாளர் என காட்டுவதற்கு எந்த ஒரு ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வாதியும், பிரதிவாதிகளும் ஸ்காட் கிறிஸ்தவ கல்லூரி ல் மூன்று மாடி கட்டிடம் கட்டுவதற்கு Tender கோரப்பட்டு அதன் அடிப்படையில் ஒப்பந்தம் செய்து கொண்டார்கள் என்றால் சரிதான்.

அந்த டெண்டரிலோ அல்லது அந்த ஒப்பந்தத்திலோ என்னை அந்த கட்டிடம் கட்டுவதற்கு என்னை இன்ஜினியராக நியமித்து சரத்து எதுவும் உள்ளதா என்றால் இல்லை, அது வரவேண்டிய அவசியம் இல்லை. இந்த மூன்று மாடி கட்டிடம் கட்டுவதற்கு என்னை இன்ஜினியராக நியமித்ததை காட்டும் எந்த ஒரு ஆவணத்தையாவது இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை, வாய்மொழியாக நியமித்தார்கள். 2,000 சதுர அடி கொண்ட கட்டிடம் கட்டுவதற்கு எவ்வளவு நாட்கள் ஆகும் என்றால் மூன்று மாதங்கள் ஆகும். அவ்வாறு மூன்று மாதங்களில் கட்ட முடியாது என்றாலும் நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன்

என்றாலும் சரியல்ல.

2,000 சதுர அடி கட்டிடம் கட்டுவதற்கு குறைந்தபட்சம் 8 முதல் 18 மாதங்கள் ஆகும் என்றால் சரியல்ல. ஸ்காட் கிறிஸ்தவ கல்லூரியில் கட்டப்பட்ட மூன்று அடுக்கு மாடி கட்டித்திற்கு கல்லூரி நிர்வாகம்தான் சிமெண்ட் மற்றும் கம்பி வழங்க வேண்டும் என்றாலும் மீதி அனைத்து பொருட்களும் வாதிதான் ஏற்பாடு செய்து கொள்ள வேண்டும் என்றாலும் சரிதான். ஆனால் அவர் அவ்வாறு செய்யவில்லை. அதேபோல சென்டரிங் போன்ற வேலைகளையும் அவர்தான் வேலையாட்களை வைத்து செய்து கொள்ள வேண்டும் என்றால் சரிதான். ஆனால் அவர் அவ்வாறு செய்யவில்லை.

வாதி அவர் செய்த வேலைக்கான Abstract Bill ஐ கல்லூரி நிர்வாகத்திற்கு சமர்ப்பித்து அதற்கான தொகையை பெற்றுக் கொள்வார் என்றால் பில்லை சமர்ப்பித்து அதை சரிபார்த்தபிறகு அவருக்கு தொகை கொடுக்கப்படும். என்னுடைய சத்திய பிரமாண வாக்குமூலத்தில் அந்த கட்டிட வேலையை 19.10.2020 முதல் 18.03.2021 க்குள் முடிக்க வேண்டும் என ஒப்பந்தப்புள்ளியில் இருப்பதாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான்.

ஆனால் வாதிக்கும், கல்லூரிக்கும் 04.11.2021 ல்தான் ஒப்பந்தம் ஏற்பட்டது என்றால் சரிதான். அந்த ஒப்பந்தம் ஏற்பட்டபிறகுதான் அந்த நிலத்தை வாதியிடம் ஒப்படைத்து வேலை ஆரம்பிக்கப்பட்டது என்றால் சரியல்ல. ஒப்பந்தத்திற்கு முன்னரே வாதியிடம் நிலம் ஒப்படைக்கப்பட்டது. வேலை தொடங்கியது 04.11.2021 க்கு பிறகுதான் என்றால் நிலம் சமப்படுத்துவது மட்டும் 04.11.2021 க்கு முன்பாகவே

செய்துவிட்டார். மற்ற வேலைகள் அதற்கு பின்னர் தொடங்கியது. மூன்று அடுக்கு மாடி கட்டிடம் என்பதால் தரையிலிருந்து பில்லர் எழுப்பிதான் கட்ட முடியும் என்றால் சரிதான்.

பில்லர் போட்ட பிறகும், தளம் போட்ட பிறகும் 20 நாட்கள் தண்ணீர் ஊற்றி, Curing முடித்தபிறகுதான் மேற்கொண்டு கட்டிட வேலை செய்ய முடியும் என்றால் சரியல்ல. பில்லர் போட்டு, தளம் எழுப்பி, அடுத்த 20 நாட்களுக்குள் அடுத்த தளம் செய்திருக்க வேண்டும். நான் சொல்வது போல அவ்வாறு கட்டிடம் கட்டினால் உறுதி தன்மை இருக்காது என்றாலும் அதனால் அவ்வாறு கட்ட மாட்டார்கள் என்றாலும் சரியல்ல. மூன்று தளத்திலும் தலா 9,000 சதுரஅடி பரப்பளவு கொண்டது என்றாலும் மொத்தம் 27,000 சதுர அடி பரப்பளவு கொண்டது என்றாலும் சரிதான். 27,000 சதுர அடி கொண்ட மூன்று அடுக்கு கட்டிடத்தை கட்டுவதற்கு அரசு வழிகாட்டுதல் படி எவ்வளவு காலம் எடுக்கும் என்றால் 4 ½ மாதங்கள் எடுக்கும். 4 ½ மாதங்களுக்குள் அவ்வாறு கட்ட முடியும் என்றாலும் 18 முதல் 24 மாதங்கள் ஆகும் என்றாலும் சரியல்ல.

மூன்று அடுக்கு கட்டிடம் கட்டியது முதல் முடியும் வரை கொரோனா தொற்று காலம் என்றால் அது எனக்கு ஞாபகம் இல்லை, அந்த கால கட்டத்தில் வேலையாட்கள் கிடைத்தார்கள். அந்த கால கட்டத்தில் கொரோனா பெருந்தொற்று காரணமாக முழு அடைப்பு இருந்தது என்றாலும் அதனால் வேலையாட்கள் கிடைக்கவில்லை என்றாலும் சரியல்ல. அந்த மூன்று அடுக்கு கட்டிடம் MBA, MCA வகுப்புகளுக்கு தேவைப்பட்டது என நான் சத்திய பிரமாண வாக்குமூலத்தில்

கூறியுள்ள விவரம் ஒப்பந்தபுள்ளியிலோ, ஒப்பந்தத்திலோ கிடையாது என்றால் சரிதான். அது கல்லூரி தேவைக்கேற்ப பயன்படுத்தப்படும்.

இந்த வழக்கில் வாதி தாக்கல் செய்துள்ள ஆவணங்களை நான் பார்த்தேனா என்றால் இல்லை. ரூபாய் 80,00,000/- த்திற்கு வேலை செய்ததாக வாதி ஆவணங்கள் தாக்கல் செய்துள்ள நிலையில், அவர் அந்த வேலை செய்யவில்லை என நான் சத்திய பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். அதற்கு ஆதரவாக ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் எங்கள் தரப்பில் நாங்கள் பில் தாக்கல் செய்துள்ளோம். எங்கள் தரப்பில் என்றால் யார் தரப்பு என்றால் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்துள்ளோம். அவ்வாறு எந்த ஒரு ஆவணமும் பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

என்னிடம் காட்டப்படுவது பிரதி வாதி தரப்பில் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ 20 ஆவணம் என்றால் சரிதான். அது அசல் ஆவணம் என்றால் சரிதான். பி.வா.சா.ஆ. 20 ஆவணத்தின் நகலை வாதிக்கு சார்பு செய்தததை காட்டும் ஆவணம் எதையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளோமா என்றால் அது எனக்கு தெரியாது. என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.ஆ. 21 ஆவணம் வாதியால் மூன்றாவது மாடியின் கூரையை வேறு நபரை வைத்து கட்டுவதில் தனக்கு ஆட்சேபனை இல்லை என கூறியுள்ளார் என்றால் சரிதான்.

வாதியுடன் பிரதிவாதிகள் செய்து கொண்ட ஒப்பந்தம் இதுவரை ரத்து செய்யப்படவில்லை என்றால் சரிதான். அவரால் வேலை செய்ய முடியாததால் தானாகவே ரத்தாகிவிட்டது. இந்த கட்டிட வேலையை பொறுத்து வேறு ஒப்பந்தபுள்ளி

கோரப்பட்டு, வேறு நபரிடம் ஒப்பந்தம் எதுவும் செய்யப்படவில்லை என்றால் சரிதான். ஆனால் அதே தொகைக்கு வாதியால் வேலை செய்ய முடியாததால் வேறு நபருக்கு அந்த வேலையை ஒப்படைத்து, வேலை முடிக்கப்பட்டது.

மூன்றாவது மாடி மேற்கூரையை தவிர வேறு வேலைகள் செய்வது குறித்து, வாதியிடமிருந்து ஆட்சேபனை எதுவும் இல்லை என்று எழுதி வாங்கினோமா என்றால் மர வேலைப்பாடுகளுக்கு எழுதி வாங்கியுள்ளோம். மற்ற வேலைகளுக்கு எழுதி வாங்கினோமா என்றால் இல்லை. மர வேலைகளும், மூன்றாவது மாடி கூரையை தவிர மற்ற வேலைகள் அனைத்தும் வாதிதான் செய்து முடித்தார் என்றால் சரியல்ல. நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் வாதி ரூபாய் 80,00,000/- த்திற்கு வேலை செய்துள்ளார் என்றாலும் அதை கொடுப்பதற்கு பிரதிவாதிகள் கடமைப்பட்டவர்கள் என்றாலும் சரியல்ல.

ஒப்பந்தபுள்ளி Estimate படி வேலை மதிப்பு ரூபாய் 1,39,90,250/- என்றால் சரிதான். அந்த வேலையில் ரூபாய் 80,00,000/- த்திற்கு அவர் வேலை செய்து அதில் ரூபாய் 59,00,000/- மட்டும்தான் பிரதிவாதிகள் கொடுத்துள்ளார்கள் என்றாலும் பாக்கியுள்ள தொகையான ரூபாய் 20,14,781/- பிரதிவாதிகள் கொடுக்கப்பட கடமைப்பட்டவர்கள் என்றால் சரியல்ல. வழக்கு பிராதுபடி செலவுத் தொகையுடன் தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.